**சுற்றுநிருபக் கடித இலக்கம்: 08/2015**

எனது இலக்கம்: ஓய்வூ/சுற்றுநிருபம்/2015
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
29-12-2015.

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்/ திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/ முப்படைத் தளபதிகள்,
பிரதேச செயலாளர்களிற்கு,

**புதிய ஓய்வூதியர் அடையாள அட்டைகளை வழங்குதல் (Visa மற்றும் NFC வசதிகள் கொண்ட)**

என்னால் வெளியிடப்பட்ட 01-06-2015 ஆந் திகதி கொண்ட ஓய்வூதியச் சுற்றுநிருபம் 4/2015 மீது தங்களது கவனத்தினைத் திருப்புகின்றேன்.

02. குறித்த சுற்றுநிருபத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஓய்வூதியர் அடையாள அட்டையினைப் பெற்றுக் கொடுப்பதற்கான விண்ணப்பத்தினைப் பூரணப்படுத்துதல் மற்றும் புகைப்படங்களைப் பெற்றுக் கொள்ளுதல் என்பன ஓய்வூதியத் திணைக்களத்தில் அமைக்கப்பட்டுள்ள சேவைக் கருமபீடங்கள் (சத்கார பியச) மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. அதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் தகவல்கள் அடிப்படையில் புதிய ஓய்வூதியர் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தற்சமயம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயல்முறையாகும்.

03. இவ் விடயத்தினைத் தொடர்ந்தும் வினைத்திறன் மற்றும் மிகச் சரியாக நிறைவேற்றும் பொருட்டு உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்திலே அனுப்பப்படுகின்ற PD 03 விண்ணப்பத்தின் இணைப்பாக இத்துடன் அறிமுகப்படுத்தப்படுகின்ற இத் தரவுப்பத்திரத்தினைப் பூரணப்படுத்திச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறே இத்தரவுப் பத்திரத்துடன் உத்தியோகத்தரின் மற்றும் துணைவரின் கடவுச்சீட்டு அளவிலான வர்ணப் புகைப்படங்கள் இரண்டினைச் சமர்ப்பித்தல் வேண்டும். (குறித்த புகைப்படங்களின் மேல் எதனையும் எழுதுதல் அல்லது சிதைவினை மேற்கொள்ளுதல் கூடாது).

04. இவ்வாறு தரவுப்பத்திரம் மற்றும் புகைப்படங்களை PD 03 விண்ணப்பத்துடன் அனுப்புவதன் மூலம் குறித்த நேர்முகத் தேர்வின் போதே புதிய ஓய்வூதியர் அடையாள அட்டையினை ஓய்வு பெற்ற உத்தியோகத்தரிடம் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

05. ஆதலால் இது தொடர்பில் தங்களது கவனத்தினைத் திருப்பிக் குறித்த உத்தியோகத்தர்களிடத்தே முறையான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

**(ஒப்பம்)**
**எஸ்.எஸ். ஹெட்டிஆரச்சி,**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.**

பிரதிகள்
1. சனாதிபதி செயலாளர்.
2. பிரதமரின் செயலாளர்.
3. செயலாளர் - பொது நிர்வாக, முகாமைத்துவ அமைச்சு
4. செயலாளர் - நிதி அமைச்சு
5. கணக்காய்வாளர் நாயகம் - தகுந்த நடவடிக்கைகளுக்காக

# Data Form for Pensioner's ID

Passport size
(40X35mm)
Color photo

40 mm

35 mm

Please fill the form in BLOCK LETTERS

Title :- Rev ☐ Mr ☐ Mrs ☐ Ms ☐

Full Name:-

Ex: - DILSHAN CHATHURANGA JAYANATHA KUMARASENA

How the name should Appear on ID:-

Ex: - D.C.J KUMARASENA

Address:-

NIC No:-

Pension No:-

W&OP No:-

Date of Retire:-

Contact No:-

Date: ......................................

......................................
Signature

Send to: - Pen ID, Department of Pensions, Maligawatta, Colombo 10, and Sri Lanka
Hot Line: - 0115927104
Email: -penid@pensions.gov.lk